**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.</u>**

**<u>OS. No. 156/2022</u>**

| | | **DEPOSITION OF WITNESS** | **PW.1** |
|---|---|---|---|
| NAME | சதீஸ்குமார் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 30.06.2026.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குதெரியும். நான் யாருக்கு கடன் கொடுத்தேன் என்றால் தினகரனுக்கு. 15.08.2021 அன்று கடன் கொடுத்தேன். எப்போது அவர் என்னிடம் கடன் கேட்டார் என்றால் கடன் கொடுப்பதற்கு 1 மாதம் முன்பு.

2. கடன் கேட்கும்போது அவர் எந்த விலாசத்தில் இருந்தார் என்றால் வித்தியலட்சுமி நகர் முருகன் கோவில், சாமியார் மடம். அவர் சொந்த வீட்டில் இருந்தார். தினகரனுக்கு என்ன வருமானம் என்றால் வருமானம் தெரியாது தறி வைத்திருந்தார். தினகரனுக்கு பணம் கொடுக்கும்போது உறவினர் மற்றும் அவரது மகன்களிடம் கேட்டு பணம் கொடுத்தேனா என்றால் தினகரனின் உறவினர் நித்தியானந்தம் சொல்லி தான் பணம் கொடுத்தேன்.

3. பணத்தை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்துக் கொடுத்தேன். கடனுறுதிச் சீட்டை நான் எழுதி வந்தேனா அல்லது அவர் எழுதி வந்தாரா என்றால் அவர் எழுதி வரவில்லை, ராக்கெட் ராஜா என் வீட்டிற்கு வந்திருந்தார் அவரை வைத்து கடனுறுதிச்சீட்டை எழுதினோம். என் வீட்டில் வைத்து எழுதினோம். யார் யார் அப்போது இருந்தார்கள் என்றால் தினகரன், ராக்கெட்ராஜா, நித்தியானந்தம் மற்றும் நான் இருந்தோம்.

4. கடனுறுதிச்சீட்டு என்ன கலர் மையினால் எழுதினோம் என்றால் ஞாபகமில்லை. கடனுறுதிச் சீட்டில் தினகரன் கையெழுத்துப்போட்டாரா அல்லது கைரேகை வைத்தாரா என்றால் கையெழுத்துப்போட்டார். தினகரன் கையெழுத்துப் போடமாட்டார் என்றாலும் கைரேகை தான் வைப்பார் என்றால் என் முன்னால் கையெழுத்து தான் போட்டார். நான் எவ்வளவு வட்டி

சொல்லி அவர் எவ்வளவு கொடுப்பதாக சொன்னார் என்றால் மாதத்திற்கு 2 ருபாய் வட்டி சொல்லி அவரும் கொடுப்பதாக சொன்னார்.

5. எத்தனை மாதம் வட்டி கொடுத்தார் என்றால் வாங்கியதிலிருந்து 1 மாதம் கூட வட்டி கொடுத்ததில்லை. தினகரனிடம் எத்தனை முறை வட்டிக் கேட்டேன் என்றால் 2 முறை சென்று கேட்டேன் அதன் பிறகு அவர் இறந்துவிட்டார். கடன் கொடுத்து அடுத்த மாதமே அவரிடம் வட்டி கேட்டேனா என்றால் 17ம் தேதி கேட்டேன் . அவர் 26.09.2021 ல் இறந்தார். தினகரன் உயிரோடு இருந்தபோது நோட்டிஸ் கொடுத்தேனா என்றால் இல்லை.

6. நான் தினகரனுக்கு கடன் கொடுக்கவில்லை என்றாலும் அவர்யார் என்றே எனக்கு தெரியாது என்றாலும் நான் பொய் வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு வீட்டிலேயே படுத்துக் கிடந்தார் என்றாலும் அவர் கைரேகை தான் வைப்பார் என்றால் சரியல்ல. தினகரன் என்னிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் நான் பொய்யாக வழக்குப் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை வழக்கிற்காக தயாரித்துள்ளேன் என்றாலும் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் அவர் இறப்பதற்கு முன்பு அறிவிப்பு கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல, அவரது மகன் கார்த்திக்கிடம் பணம் வாங்கியது பற்றி சொல்லி இருந்தேன் அவர் சரிவர பதிலளிக்கவில்லை. பொய் ஆவணம் தயார் செய்து வாரிசுகளிடம் பணம் பறிக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Digitally signed by K KARTHICK ASATH
Date: 2026.06.30 15:54:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.